செ.வெ.எண்.192 நாள்.03.05.2017

# <u>பத்திரிகை செய்தி</u>

## <u>தொழில் நிறுவனங்களுக்கு வரைபட அனுமதி</u>

குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்கு தீயணைப்பு & மீட்புத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை, நகர ஊரமைப்பு துறை, மாசு கட்டுப்பாடு வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட அரசு துறைகளிலிருந்து வரைபடத்திற்கான அனுமதி பெற்ற பிறகே கட்டிடப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

தொழில் நிறுவனங்களின் வசதிக்காக பல்வேறு துறைகளை தனித்தனியே அணுகி அனுமதி பெறுவதில் ஏற்படும் இடர்களைக் களைய மாவட்ட தொழில் மையம் மூலம் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட ஒற்றைச்சாளர தீர்வுக்குழு செயல்பட்டு வருகிறது. இக்குழு ஒவ்வொரு மாதமும் கூட்டப்பட்டு அனுமதி வழங்குவதில் உள்ள தாமதங்களை ஆய்வு செய்து தீர்வு கண்டுவருகிறது.

எனவே, தொழில் முனைவோர்கள் வரைபட அனுமதியை விரைந்து பெற மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள ஒற்றைச் சாளர தீர்வுக்குழு ஒருங்கிணைப்பாளராகிய மாவட்ட தொழில் மைய பொது மேலாளரிடம் (தொலைபேசி எண். 044–27238837, 27236686, 27238551) விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்த ஒற்றைச்சாளர விண்ணப்ப நடைமுறை கணினிமயமாக்கப்பட்டு விரைவில் இணையதள வாயிலாக விண்ணப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.